**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **56**

| | | | |
|---|---|---|---|
| Name: | மணி | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A 1, A11, A12, present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of** 29.05.2023

**முதல் விசாரணை**:

நான் தென்காசி மாவட்டம் இலத்துார் சங்கர் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் எல்.ஆர்.எஸ்.பாளையத்தில் பூக்கடை வைத்துள்ளேன். நான் வழக்கமாக காலை 7.00 மணிக்கு கடையை திறந்து இரவு 9.00 மணிக்கு கடையை அடைப்பேன். நான் கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் சுமார் காலை 10.15 மணிக்கு மேல் எல்லோரும் பிரச்சனை என்று கூறி ஓடினார்கள். நானும் கடையை பூட்டி விட்டு ஓடிவிட்டேன். நான் வழக்கம் போல் கடையை திறக்க வரும்போது எல்.ஆர்.எஸ்பாளையம் கூலக்கடை பஜார் விலக்கில் இரண்டு பிரிவினருக்கும் இடையே தகராறு என சொன்னார்கள். குமார் பாண்டி வகையறாவுக்கும் வேறு சிலருக்கும் தகராறு என கேள்விப்பட்டேன். இரண்டு தரப்பிலும் கொலை நடந்ததாக கேள்விப்பட்டேன். இரண்டு பிரிவினர்கள் இஸ்லாமியர் என்றும் இந்துக்கள் என்றும் தெரியவந்தது. எதிரிகளை நான் பார்த்ததில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சுமார் 4-5 நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். என் கடையில் வைத்து என்னை விசாரித்தார்கள். இந்து முஸ்லீம் பிரச்சனை என்னவென்று எனக்கு நேரில் தெரியாது. இறந்துபோன 6 நபர்களின் பெயர் தெரியாது. எப்படி இறந்தார்கள் என்றும் தெரியாது. 6 நபர்களில் யார் யார் இந்துக்கள் என்பதும் முஸ்லீம்கள் என்பதும் அவர்கள் என்ன இனத்தை சேர்ந்தவர்கள் என்பதும் தெரியாது.